**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை**

**அசல் வழக்கு எண். 86/2021**

PW1 – திரு. சுப்பிரமணி நாள். 17.11.2023

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திருமதி.B.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**5, 6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 5 மற்றும் 6 பிரதிவாதிகளை பொறுத்தவரை என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பட்டா மாறுதல் தொடர்பாக பரிகாரம் கேட்கப்பட்டது. 20.09.2021 ம் தேதி 5, 6 பிரதிவாதிகள் மற்றும் வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பு தான் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 அறிவிப்பிற்கு முன்னால் 6 ம் பிரதிவாதிக்கு ஏதேனும் சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டிருந்ததா என்றால் அனுப்பப்பட்டது. மேற்படி அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். மேற்படி அறிவிப்பை நான் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றும் தாக்கல் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 தான் 6 ம் பிரதிவாதியால் மேற்படி அறிவிப்பிற்கு அனுப்பப்பட்ட தாக்கீது என்றால் சரிதான்.

2. நான் நேரடியாக 5, 6 பிரதிவாதியிடமோ, வருவாய் கோட்டாட்சிரியடமோ பட்டா மாறுதல் தொடர்பாக மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் தாவா சொத்திற்கு விளம்புகை பரிகாரம்

கேட்கப்படவில்லை என்றால் சரிதான். வருவாய் ஆவணங்கள் தொடர்பாக பரிகாரம் கேட்கப்பட வேண்டும் என்றால் வருவாய் துறையில் தான் கேட்கப்பட வேண்டும் இந்நீதிமன்றத்தில் கேட்கப்பட முடியாது என்று சொன்னால் சரியல்ல. சட்டத்தினால் தடைசெய்யப்பட்ட பரிகாரத்தை இந்நீதிமன்றத்தில் கேட்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல.

3. வா.சா.ஆ.8 ஆவணமான சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டதாக சொல்லப்படும் மனுவின் அசலை தான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் அசல் நீதிமன்றத்தில் தாக்கலாகி இருக்கும் பட்சத்தில் எவற்றை சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்தேன் என்றால் நகல் எடுத்து கொடுத்தேன். நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றும் வா.சா.ஆ.8 ஆவணமானது என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

4. 7ம் பிரதிவாதி ஆவணம் சரியாக இருந்தால் பதிவு செய்வார் என்றும் அவற்றை பதிவு செய்யக்கூடாது என எந்த பரிகாரமும் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை தொடர்பாக பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பத்திரம் செல்லாது என கூறி இவ்வழக்கில் பரிகாரம் கேட்கப்படவில்லை என்றால் சரிதான். 5, 6 மற்றும 7 பிரதிவாதிகளுக்கு எதிராக கேட்கப்படும் பரிகாரம் கிடைக்கக்கூடியது இல்லை என்றும் அதனால் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை